# சிங்கப்பூர், சீனா இடையே 7 ஒப்பந்தங்கள்

கலைகள், தொழில்முனைவு, அறிவார்ந்த சொத்து போன்றவை உள்ளிட்ட இருதரப்பு ஒத்துழைப்புகளின் தொடர்பில் சிங்கப்பூருக்கும் சீனாவுக்கும் இடையே ஏழு புதிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகி உள்ளன.

இரு நாடுகளுக்குமிடையே ஆண்டுதோறும் நடத்தப்படும் இருதரப்புக் கூட்டம் நேற்று துணைப் பிரதமர் டியோ சீ ஹியன், சீன துணை அதிபர் ஹான் ஸெங் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் செயின்ட் ரெஜிஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் ஓர் உத்திபூர்வ பணிச்சட்ட ஒப்பந்தமும் நேற்று நடைபெற்ற இருதரப்பு ஒத்துழைப்புகளுக்கான கூட்டு மன்றத்தின் 14வது கூட்டத்துக்கிடையே கையெழுத்திடப்பட்டன.

அரசாங்கங்களுக்கு இடையிலான திட்டப்பணிகளைப் பெருக்குதல், டியன்ஜின் சுற்றுச்சூழல் நகரம்; இருதரப்பு கலைஞர்கள், கலைக் குழுக்களுக்கிடையேயான பரிமாற்றங்கள், ஒத்துழைப்பு; சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் ஆய்வுக் கழகத்தை சோங்சிங்கில் அமைத்தல்; மேம்பட்ட உற்பத்தி, உயிரியல்மருத்துவம், ‘நானோ’ தொழில்நுட்ப விண்ணப்பங்கள் போன்ற வளர்ந்துவரும் தொழில்துறைகளில் ஒத்துழைப்பு ஆகியன தொடர்பிலான ஒப்பந்தங்கள் அவை.

ஆண்டுதோறும் நடத்தப்படும் இருதரப்பு ஒத்துழைப்புகளுக்கான கூட்டு மன்றக் கூட்டம் சிங்கப்பூருக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பு பற்றி விவாதிக்கும் ஆக உயர்ந்த நிலைக் கூட்டமாகும். திரு ஹான் பதவியேற்ற பிறகு அவர் பங்கேற்கும் முதல் கூட்டு மன்றக் கூட்டம் இது. சீனாவின் முக்கிய முடிவுகள் எடுக்கக்கூடிய சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழு உறுப்பினர் ‘பொலிட்புரோ’ நிலைக் குழுவின் உறுப்பினராக அவர் இருக்கிறார்.

இருதரப்புக் கூட்டம் நிறைவுற்றதை அடுத்து பிறகு ஏழு ஒப்பந்தங்களும் கையொப்பமானதை திரு டியோவும் திரு ஹானும் பார்வையிட்டனர்.




சிங்கப்பூர், சீனா இருதரப்பு ஒத்துழைப்பு கூட்டு மன்றக் கூட்டத்தை முன்னிட்டு சிங்கப்பூர் வந்திருந்த சீனப் பேராளர்கள், நகர மறுசீரமைப்பு ஆணையத்தின் காட்சிக் கூடத்தைப் பார்வையிட்டனர். **படம்: சாவ் பாவ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.